**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.53/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் புதன் கிழமை

வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நன்னைகுமரன் | த/பெ.: | மாணிக்கம் |
| கிராமம்: | திருத்தங்கூர் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கிராம நிர்வாக அலுவலர் |
| வயது: | 36 | முகவரி: | திருத்தங்கூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 04.06.2025

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். நான் மேற்படி கிராமத்தில் கடந்த 4 மாதங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். வாதியின் தாயார் சுலோச்சனா மற்றும் தகப்பனார் சபாபதி ஆகியோர்களுக்கு சொந்தமான நஞ்சை நிலங்கள் தாவா கிராமத்தில் உள்ளது. தாவா ஏ அட்டவணை சொத்திற்கான அதற்குண்டான சிட்டா அசல் கொண்டு வந்துள்ளேன். அந்த சிட்டாவின் உண்மை நகல் (எண்ணிக்கை 5) **சா.சா.ஆ.1** ஆகும். தாவா பி அட்டவணை சொத்திற்கு வாதி பெயரில் உள்ள சிட்டாவின் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். அந்த சிட்டாவின் உண்மை நகல் (எண்ணிக்கை 4) **சா.சா.ஆ.2** ஆகும். தாவா ஏ மற்றும் பி சொத்திற்காக 1434–ம் ஆண்டிற்கான அடங்கல் கணக்கு உண்மை நகல் (எண்ணிக்கை) 11 **சா.சா.ஆ.3** ஆகும். நான் தாவா கிராமத்திற்கு சென்று தாவா சொத்துக்களை பார்வையிட்டேன்.

**நான் விசாரணை செய்த போது தாவா சொத்துகளானது வாதியின் அனுபவத்தில் இருந்து வருவது தெரிந்து கொண்டேன்.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.